வகுப்பினைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்ற தகவலை தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : சுருக்கமாகச் சொன்னால், ''தர முடியாது'' என்று நான் சொல்ல முடியும். ஆனால் இந்த தேசிய உதவித் திட்டம் என்ற அடிப்படையில் அதிக எண்கள் பெருகிறவர்களுக்கு வழங்குவது என்ற அந்தக் கண்ணோட்டத்தில் வழங்கப்படுகிற காரணத்தால் இந்தப் பிரச்சினை இதிலே எழுவது இல்லை. அந்த அடிப்படையில் புள்ளி விவரம் தருவதும் இல்லை.

விருத்தாசலத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள்

*1636 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலத்தில் சப்கோர்ட், முன்சீப் கோர்ட், மாஜிஸ்ட்ரேட் கோர்ட் முதலியவற்றில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடங்கள் கட்ட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) எப்போது கட்டி முடிக்கப்படும்?

9-20 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலத்தில் ரூ. 36.60 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டிடம் கட்டும் திட்டத்தினை படிப்படியாக நிறைவேற்ற 14–7–1987 நாளிட்ட உள்துறை, அரசு ஆணை எண். 1721-ல் ஒப்புதல் அளிக்கப்பட டது. 14–3–1990 வரை ரூ. 34,60,140 செலவு செய்யப்பட்டுள்ளது. 1989–90-க்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 16.70 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கட்டிட வேலைகள் யாவும் முடிக்கப்பட்டு, கட்டிடத்தில் குடிநீர் வசதி, மின் வசதி மற்றும் கழிவு நீர் வசதிகள் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கோ. பூவராகன் : தலைவர் அவர்களே, இந்த ஒதுக்கீட்டில் வக்கீல்கள், குமாஸ்தாக்கள், கட்சிக்காரர்கள் தங்குவதற்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? சைக்கிள்

1990 ஏப்ரல் 16]

ஸ்டாண்டு வைப்பதற்கும் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? காம்பவுண்டு வாலும் இந்த ஒதுக்கீட்டில் இடம் பெற்றிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு இதிலே ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இந்த மதிப்பீட்டிற்குள்ளே அந்தச் செலவு அடங்குமானால் அதையும் இந்த அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோ. பூவராகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் பணியாற்றுகின்ற நீதிபதிகளுக்குத் தனியாக அவர்கள் தங்குவதற்காக விடுதிகள் கட்டுவதற்கு ஏதாவது ஏற்பாடு இருக்கிறதா? இந்த ஆண்டுத் திட்டத்திலே அதைச் சேர்த்து செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நீதிபதிகளுக்கு வீடுகள் கட்டும் திட்டம் குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. இந்த நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில் புள்ளிவிவரங்கள் இல்லை. என்றாலும் அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிதம்பரனார் மாவட்ட நீதிமன்றம்.

2164 திரு. என். பெரியசாமி :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்க உயர்நீதிமன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அரசு அதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. என். பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் தலைமை நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். நாங்கள் பலமுறை கேட்டதற்கிணங்க அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றி, இப்போது இந்த நீதிமன்றக் கட்டிடம் அங்கே புதியதாகக் கட்ட வேண்டிய தேவையில்லை. கட்டிடம் அங்கே இருந்து கொண்டிருக்கிறது. ஆகையால் துரிதமாக அது ஆரம்பிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.